வேலூர் மாநகராட்சி 87.915 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இம் மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 504079. வேலூர் மாநகராட்சியில் 2000–ஆம் ஆண்டு முதல் புதிய பேருந்து நிலையம் பாலாறு அருகில் 9.25 ஏக்கர் பரப்பளவில் 41 பேருந்து வழி நிறுத்த தளங்களுடன் பயன்பாட்டில் உள்ளது. இப்பேருந்து நிறுத்தமானது புறநகர் பேருந்து நிலையமாக உள்ளதால் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பயணிகள் பயன்படுத்துகின்றனர். மேலும், இப்பேருந்து நிலையமானது தேசிய நெடுஞ்சாலையின் அருகில் அமைந்துள்ளதால் அருகிலுள்ள மாநிலங்களுக்கும் இப்பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது இப்பேருந்து நிலையமானது பகுதி அளவு Steel Structural ஆன மேற்கூரை மற்றும் தார் சாலையான தரைதளத்துடன் இயங்கி வருகிறது.